DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.98/2008

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரபோஸ் | Father's/Husband's Name : | மலைச்சாமி என்ற பேயத்தேவர் |
| Village | : அண்ணாநகர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 67 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2026

**16 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான், அவர் எனது மனைவி. நான் சுங்க வரித்துறையில் கூடுதல் ஆணையாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். தாவா சொத்தை வாதி கிரையம் வாங்கும்போது நான் அரசு பணியில் இருந்தேன் என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, உரிமை இருக்கிறது. எந்த வகையில் உரிமை இருக்கிறது என்றால் தாவா சொத்தை அனுபவம் செய்தவரிமிருந்து கிரையம் வாங்கியிருக்கிறார். யாரிடம் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்றால் 1992ம் ஆண்டு இராசுத்தேவரின் வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கியிருக்கிறார். இராசுத்தேவர் தாவா சொத்தை 1961ம் ஆண்டு தாயம்மாள் என்பரிமிருந்து கிரையம் வாங்கினார்.

2) தாவா சொத்தின் சர்வே எண்.892/2 ஆகும். அதன் விஸ்தீரணம் 4 ஏக்கர் 80 செண்டாகும். வாதி இராசுத்தேவர் வகையறாவிடமிருந்த கிரையம் வாங்கிய ஆவணம் தான் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திற்கு மூல பத்திரம் இல்லை என்றால் சரியல்ல. இராசுத்தேவர் கிரையம் வாங்கிய ஆவணம் தான் மூல பத்திரம் ஆனால் எங்கள் ஆவணத்தில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இராசுத்தேவர் கிரையம் வாங்கிய ஆவணத்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேன். வா.சா.ஆ.1 கிரையம் ஏற்பட்ட 30.10.1992ம் தேதியில் இராசுத்தேவர் வாரிசுகளிடம் வே றுசொத்தையும் கிரையம்

வாங்கியிருக்கிறோம் என்றால் சரிதான், எனது அம்மா பெயரில் வாங்கினோம். தாவா சொத்தையும் சர்வே எண்.882/2C யில் 4 ஏக்கர் 66 செண்ட் நிலத்தையும் அன்றைய தேதியில் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். மேற்படி 2 சொத்திற்கான மூல ஆவணங்களும் ஒன்றாக உள்ளது என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3) தாவா சொத்திற்கு மூல ஆவணங்கள் இல்லை என்றாலும் வேறு சொத்திற்கான மூல ஆவணத்தை காட்டி தாவா சொத்தை மோசடியாக கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் சர்வே எண்.892 ல் மேல்புறம் 46 செண்ட் நிலம் இராசுத்தேவர் தாயம்மாளிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்திற்கான மூல ஆவணமாக இராசுத்தேவர் 22.07.1948 ம் தேதி வாங்கிய கிரையப் பத்திரம் காட்டப்பட்டுள்ளது என்றால் தவறாக உள்ளது. இராசுத்தேவரின் வாரிசுகள் எனது மனைவி மற்றும் அம்மாவிற்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.105/2017 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாவா சொத்து 2 வது லக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்காகவும் அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

4) மேற்படி வழக்கில் இராசுத்தேவரின் வாரிசுகள் தாவா சொத்தை இராசுத்தேவர் தாயம்மாளிடமிருந்து கிரையம் வாங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து இராசுத்தேவருக்கு தனி வட்டாட்சியர் (நில உடைமை) அவர்களின் நடவடிக்கையில் ந.க.எண்.அ 2/4210/85(SS4) மூலம் சர்வே எண்.892 ல் 4 ஏக்கர் 80 செண்ட் இராசுத்தேவருக்கு 24.12.1985 ல் கிடைத்தாக மேற்படி வழக்கில் சொல்லியுள்ளார்கள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த Assignment Order ன் அடிப்படையில் இராசுத்தேவருக்கு பட்டா எண்.2908 ன் படி பாத்தியப்பட்ட சொத்தை தான் வாதி கிரையம் பெற்றிருக்கிறார் என்றால் சரியல்ல, அவ்வாறு எங்கள் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் 1945–1986 ம் ஆண்டு வரையிலுள்ள வில்லங்கச் சான்றிதழில் தாவா சொத்தை இராசுத்தேவர் கிரையம் வாங்கியதாக பதிவு இல்லை என்றால் அந்த ஆவணம் எனக்கு புரியவில்லை.

5) மேற்படி வில்லங்க சான்றிதழில் 04.05.1956ம் தேதி சீனித்தேவர் தாயம்மாளிடமிருந்து சர்வே எண்.892ல் 4 ஏக்கர் 80 செண்ட் கிரையம் வாங்கியதாக பதிவு உள்ளது என்றால் சரிதான், நீதிமன்ற தீர்ப்பில் வேறாக இருக்கிறது. இராசுத்தேவர் வகையாறாவிடமிருந்து வாதி கிரையம் வாங்கவில்லை என்றாலும் நாங்களாக உற்பத்தி செய்த மோசடி ஆவணம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூல ஆவணம் தவறாக உள்ள விபரம் எனக்கு தெரியும், அதற்கான சட்டப்படியான நடவடிக்கை எடுத்திருக்கிறேன். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்றும் அதனால் இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ள மூல ஆவண விபரம் சுந்தரராவ் என்பவர் இராமகிருஷ்ண முதலியார் என்பவரிடம் கிரையம் வாங்கியதாக உள்ளது என்றால் எங்கள் ஆவணத்தில் தவறாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

6) வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்தோம் என்றால் சரிதான். வாதி பெயரில் தவறுதலாக UDR ல் பட்டா மாற்றம் ஏற்பட்டு விட்டதாகவும் அதை ரத்து செய்யக்கோரி கடந்த 02.11.1996ம் தேதி 1ம் பிரதிவாதி ஆண்டிபட்டி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவின் விசாரணை முடிவில் வாதி பெயரில் வழங்கிய பட்டாவை ஆண்டிபட்டி வட்டாட்சியர் 02.11.1996ம் தேதியிட்ட நடவடிக்கைகள் மு.மு.எண்.7386/96/அ2ன்படி ரத்து செய்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி ரத்து செய்த பட்டாவை தான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் 1992ம் ஆண்டு வழங்கிய பட்டா, அது மட்டும் தான் எங்களிடம் உள்ளது. மேற்படி தாசில்தார் உத்தரவின் மீது நாங்கள் பெரியகுளம் சார் ஆட்சியரிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவை விசாரணை செய்து கால தாமதத்தை காரணம் காட்டி வட்டாட்சியர் உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல, நீதிமன்ற தீர்ப்பை மேற்கோள் காட்டி தான் வட்டாட்சியர் உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

7) மேற்படி உத்தரவை எதிர்த்து 1ம் பிரதிவாதி தேனி மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு விசாரணையில் பெரியகுளம் சார் ஆட்சியர் பிறப்பித்த உத்தரவை 26.11.2001ம்

தேதியிட்ட நடவடிக்கைகளின்படி மாவட்ட வருவாய் அலுவலர் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து சென்னை நில நிர்வாக ஆணையரிடம் வழக்கு தாக்கல் செய்தோம்என்றால் சரிதான். அதில் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டதால் 1ம் பிரதிவாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பட்டா நடவடிக்கைகள் சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி WP.No.21019/2003 தாக்கல் செய்த மனுக்களில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். WA.NO.1170/2006 வழக்கில் ஏற்பட்ட உத்தரவிற்க்கு எதிராக வாதி Review Application No.155/2008 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த Review Application தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

8) அதன்பிறகு WP.No.21019/2003 மற்றும் WA.No.1170/2006 என்ற மனுக்களில் ஏற்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்ய RA.No.79/2009 என்ற மனுவை வாதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான், அந்த மனுவும் கடந்த 22.07.2009ம் தேதி ரூ.10,000/- அபராதத்துடன் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். WA.No.1170/2006 மற்றும் Review Application No.79/2009 உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் SLP.Civil No.25806-25807/2009 ஆகி யமனுக்கள் தாக்கல் செய்து அதுவும் 19.07.2010ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன்பிறகு Review Application No.79/2009 ல் ஏற்பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்த SLP.No.8358/2011 என்ற மனு தாக்கல் செய்து 13.05.2011ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விபரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யும் வரை நடந்த விபரங்களை சொல்லியுள்ளோம்.

9) எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சர்வே எண்.880, 881க்கும் தாவா சொத்திற்கும் என்ன சம்பந்தம் என்றால் இராசுத்தேவர் கிரையம் வாங்கிய ஆவணத்திலும் அதன்பிறகு நடந்த வழக்குகளில் சீனித்தேவர் நிலத்திற்கான நான்குமாலாக காட்டப்பட்டிருக்கிறது. சர்வே எண்.880, 881ல் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் வா.சா.ஆ.3 கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன். மேற்படி சர்வே எண்.880, 881ல் உள்ள சொத்துக்களை இராசுத்தேவர்

கடந்த 18.11.1994ம் ஆண்டில் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. சர்வே எண்.880, 881 உள் ளநிலங்கள் சம்பந்தமாக அனைத்து வழக்கு மற்றும் நடவடிக்கைகளில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

10) வாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டபிறகு தவா சொத்திற்கு தற்போது 1ம் பிரதிவாதி மற்றும் 16 முதல் 19 பிரதிவாதிகள் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சர்வே எண்.892/2ல் 1 செண்ட் நிலம் கூட கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.880, 881ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் தற்போது 15ம் பிரதிவாதி தியாகராஜனிடம் தான் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கில் உண்மை விபரங்களை மறைத்து தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோசடி ஆவணம் தாக்கல் செய்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லாததால் நாங்கள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 02.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.02 13:37:09 +0530

District Munsif,
Aundipatti.